Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.303/2024

2026-ம் ஆண்டு **மே** மாதம் **20-ம் தேதி புதன்கிழமை** குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 6-வது** நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. பாலமுருகன், இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | தலைமை காவலர் 1801 |
| பெயர். | - | அன்பு | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க/பெ. | | கமலக்கண்ணன் | சமயம் | - | - |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | வயது | - | 44 |

20.05.2026

2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜரில்லை. 1 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.03.2022 ந் தேதி 17.00 மணியளவில் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது செம்மார் கிராமத்தைச் சேர்ந்த குப்புசாமி மகன் ஆதிகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப் பெற்று நிலைய குற்ற எண். 167/2022 இ.த.ச சட்ட பிரிவுகள் 294(b), 323, 324 ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.** பின்னர் வழக்குகோப்புகளை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்,

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் எத்தனை மணிக்கு புகார் பெற்றேன் என்றால் 13.03.2022 அன்று 17.00 மணிக்கு புகார் பெற்றேன். புகார்கொடுக்கும்போது அவர் மருத்துவமனைக்கு சென்றுவந்ததற்கான சான்று ஏதேனும் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். நான் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்தேனா என்றால் ஆமாம். புகார்தாரர் புகாருடன் என்ன மருத்துவச் சான்று கொடுத்தார் என்றால் விபத்து பதிவேட்டின் நகல் கொடுத்தார்.

2. புகார்தாரர் என்னிடம் கொடுத்த புகாரில் விபத்துபதிவேட்டின் நகலை இணைத்துகொடுத்தாரா என்றால் ஆமாம். நான் காவல் உதவி ஆய்வாளரிடம் வழக்கின் கோப்புகளை ஒப்படைக்கும்போது புகார், அதனுடன் இணைந்த விபத்து பதிவேடு நகல், முதல் தகவல அறிக்கை ஆகியவற்றை சேர்த்துதான் கொடுத்தேனா என்றால் ஆமாம்.

3. என்னிடம் கொடுத்த புகாரில் சம்பவச் சாட்சிகளை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா சொல்லியுள்ளார். பெயர் நியாபகம் இல்லை. அ.சா.1 யை நான் விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்தேன். நான் வழக்கு கோப்பை எப்போது காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் அன்றைக்கே ஒப்படைத்தேன். அதன் பிறகு எத்தனை நாட்கள் கழித்து உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் தேதி நினைவில் இல்லை. ஒரு மாதம் இருக்குமா என்றால் இருக்கும்.

**Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.**

**(Sd./-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**